★ பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No: QB/89/5/78

மலர்: 21 வைகாசி: 12 ஜ-அகிர்: 28 இதழ்: 106
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 26-5-79

உற்சாகத்தை அளிக்கவல்லது
அண்ணா கோப்பி
மின்சார ரோஸ்டரில்
உங்கள் முன்னிலையில் வறுத்து
அரைத்த
அண்ணா கோப்பியை
வேண்டிய அளவுகளில்
பெற்றுக்கொள்ளலாம்.
விஜயம்செய்யுங்கள்
அண்ணா கோப்பிக்கடை
இல. 4, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

RECEIVED 1979-5-28 PERIODICALS DIVISION

## இலங்கை வெற்றி!

லண்டன், மே. 25

இலங்கைக் கிரிக்கெட் கோஷ்டிக்கும், அமெரிக்கக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உலகக் கிண்ணத் தகுதிகாண் ஆட்டத்தில் இலங்கைக் கோஷ்டி 6 விக்கட்டுகளால் வெற்றிபெற்றது.

அமெரிக்கா சகல விக்கட்டுகளையும் இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது. இலங்கைக் கோஷ்டி 4 விக்கட் நஷ்டத்திற்கு 169 ஓட்டங்களைப் பெற்றது. [இ]

# இலங்கை-இந்தியக் கூட்டுறவு

# வர்த்தகத் திட்டம்

## சின்ன வெங்காயம், கருவாடு

### மைசூர்ப் பருப்பு, பால்வகை இறக்குமதி

(கொழும்பு)

இலங்கை-இந்தியக் கூட்டுறவுச் சங்கங்களிடையே பரஸ்பர வர்த்தகத் திட்டம் ஒன்று விரைவில் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இத்திட்டத்திற்கமைய விரைவில் இந்தியாவிலும், இலங்கையிலும் உள்ள சிறந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே வர்த்தக ஒப்பந்தங்கள் செய்யப்படவுள்ளன.

இந்த ஒப்பந்தத்திற்கமைய இந்தியாவிலிருந்து சின்ன வெங்காயம், பம்பாய் வெங்காயம், கருவாடு, பால்மா, மைசூர்ப் பருப்பு, சிறிய விவசாய உபகரணங்கள் ஆகியன இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும்.

அண்மையில் இலங்கையிலிருந்து கூட்டுறவு உயர் அதிகாரிகள் குழுவொன்று தமிழ்நாட்டுக்கும், கர்நாடக மாநிலத்திற்கும் விஜயம் செய்து, அங்குள்ள கூட்டுறவுச் சங்க அதிகாரிகளுடன் பேச்சு நடத்திவிட்டு நாடு திரும்பியிருந்தது.

இது தொடர்பாக விரைவில் தமிழ்நாடு, கர்நாடக மாநிலக் கூட்டுறவுத்துறை அதிகாரிகள் இலங்கை வரவிருக்கின்றனர். (இ)

## யாழ். மாவட்டத்தில் காணி இல்லாதவர்களுக்கு ஒரு ஏக்கர் கிடைக்கும்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள காணியற்ற மக்களுக்கு ஒரு ஏக்கர் துண்டுகளாக சுமார் 1000 ஏக்கர் காணி வழங்கப்படவிருக்கிறது. இதற்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இக்காணிகள், காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் கையேற்ற பளை உதவி அரசாங்க அதிபர் பகுதியிலுள்ள இத்தாவில், சோழன்பற்று புலோப்பளை, கிளாலி, கோவில்வயல், முகமாலை, முழங்காவில் ஆகிய இடங்களில் வழங்கப்படும்.

குடியிருப்பாளராகத் தெரிவு செய்யப்படுபவர் இலங்கைப் பிரஜையாகவும் 22-5-79ல் 18 வயது பூர்த்தி அடைந்தவராகவும் 7 வருடங்கள் ஒரே கிராம சேவையாளர் பிரிவில் வசித்தவராகவும் சொந்தக் காணியற்றவராகவும், 750 ரூபாவிற்கு மேற்படாத மாத ஊதியம் பெறுபவராகவும் இருக்கவேண்டும். ஒரு குடும்பத்தில் ஒருவர்தான் குடியிருப்பாளராக காணி கொடுப்பதற்குத் தெரியப்படுவார்.

சகல விண்ணப்பங்களும் ஜூன்மாதம் 6ம் திகதி அல்லது அதற்கு முன்பதாக அரசாங்க

[3ம் பக்கம் பார்க்க]

## யாழ். பல்கலைக் கழகத்தில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் சோ. செல்வநாயகத்தின் பூதவுடல் இறுதி மரியாதை செலுத்துமுகமாக

(8-ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஹேரத் யாழ். விஜயம்

### நான்கு நாட்கள் தங்கியிருப்பார்

[யாழ்ப்பாணம்]

உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. ஹேரத் 4 நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு இம்மாதம் 31ம் தேதி யாழ்ப்பாணத்திற்கு வருகின்றார். அமைச்சருடன் பிரதி அமைச்சர் திரு சரத்சந்திர ராஜகருணா கூட்டுறவுத்துறை ஆணையாளர் திரு திசநாயக்கா, உணவு கமிஷனர் ஜனுப் ஹசன் ஆகியோர் வருகிறார்கள்.

31ம் தேதி கொழும்பிலிருந்து மோட்டார்வண்டிமூலம் புறப்படும் அமைச்சர், அன்று மாலை 6-30 மணிக்கு யாழ். 'இகிஸ்கவுசை' வந்தடைவார்.

1ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிக்கு அமைச்சர் ஹெறத் ஸ்ரீ நாகவிகாரைக்கும், 9-30 மணிக்கு நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கும் சென்று வழிபடுவார்.

காலை 9-45 மணிக்கு யாழ். கச்சேரி மண்டபத்தில் நடைபெறும் மாநாட்டில் அமைச்சர் கலந்துகொள்வார்கள். இம்மாநாட்டில் யாழ். மாவட்ட அமைச்சர் ஜனுப் மன்சூர் யாழ் மாவட்ட எம். பிக்கள், மாவட்ட செயலாளர் திரு. யோகேந்திரா துரைசுவாமி மற்றும் இலாகா தலைவர்கள் கலந்துகொள்வார்கள்.

காலை 11-30 மணிக்கு கச்சேரியிலுள்ள யாழ் உதவி உணவு கட்டுப்பாட்டதிகாரி காரியாலயத்திற்கு விஜயம் செய்வார். 12-15 மணிக்கு உதவி கூட்டுறவு ஆணையாளர் காரியாலயத்திற்குச் செல்வார்.

பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், கடற்றொழில் சங்கங்களின் தலைவர்

[8ம் பக்கம் பார்க்க]

யாழ். பல்கலைக்கழகம் சகல துறைகளிலும் முன்னேறிவரும் வேளையில்

# பேராசிரியர் 'செல்வா'வின் மறைவு பேரிழப்பு

### துணைவேந்தர் 'வித்தி' அனுதாபம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பலதுறைகளிலும் முன்னேறிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் பேராசிரியர் செல்வநாயகத்தின் மறைவு ஈடுசெய்யமுடியாத இழப்பாகும்.

இவ்வாறு யாழ் பல்கலைக்கழக புவியியல் துறைத்தலைவர் பேராசிரியர் சோ. செல்வநாயகத்தின் மறைவையொட்டி யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தமது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

யாழ். வளாகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாகி ஐந்து மாதங்களாக விக்கை எங்கள் புவியற்துறைத் தலைவர் பேராசிரியர் செல்வநாயகம் அகாலமரணமடைந்தது யாழ் பல்கலைக்கழகத்திற்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். மாணவனாய், விரிவுரையாளராய், பேராசிரியராய் அவரின் படிப்படியான வளர்ச்சியை அவதானித்த எனக்கு அவர் யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியராக நியமனம் பெற்றது பெருமகிழ்ச்சியை அளித்தது. யாழ்ப்பல்கலைக்கழகம் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி பெற்றுச் சிறந்த பல்கலைக்கழகமாக விளங்குவதற்கு உறுதுணையாகவும் இருப்பார் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது. நேர்மையானவர், பிழையெனக் கண்டதை நண்பர்களென்றாலும் கண்டித்துக்கூறுவர், நாடும் போதெல்லாம் வேண்டிய ஆலோசனைகள் கூறுபவர். அத்தகைய பெருந்தகை எமது பல்கலைக்கழகத்திற்குக் கிடைத்தமை எமது பாக்கியமெனக் கருதினேன் ஆனல் விதி சதி செய்துவிட்டது. இனிப் புவியியல் துறைய வளர்ப்பதற்கு

[8ம் பக்கம் பார்க்க]

செவன்சீஸ் மீன் எண்ணெ

SEVENSEAS CODLIV R OIL

மேற்குறிப்பிட்ட மீன் எண்ணெய்க்கு வடபகுதி ஏகவிநியோகஸ்தர்களாக நாங்கள் நியமிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். எனவே உங்கள் தேவைகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்!

பெனின்சுலா ஏஜன்சீஸ்

25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

2557 தொலைபேசி: 7657

இன்று ராஜாவில்

"இருமலர்கள்"

சிவாஜிகணேசனின் "இருமலர்கள்"

யாழ் ரோட்டரிக் கழகத்தின் சமூக சேவை நிதிக்காக இன்று மாலை 6-30க்கு மட்டும் யாழ் ராஜா தியேட்டரில் காட்சியளிக்கிறது. பிரதம அதிதிகளாக திரு, திருமதி சின்னத்துரை அவர்கள் கலந்து கௌரவிப்பார்கள். டிக்கட்டுக்களை தியேட்டரில் பெற்றுக் கொள்ளலாம்.

டிக்கட்டுகள் விபரம்: ரூ. 25 (இருவர்மட்டும்) ரூ. 15, ரூ. 10, ரூ. 5.

2573

யாழ்/கோண்டாவில் சைவத் தமிழ்க்
கலவன் வித்தியாலயம்
பெற்ருேர்-ஆசிரிய சங்கம்

## விசேட பொதுக்கூட்டம்

தலைவர் : திரு. செ. நடராசா அவர்கள் [வித்தியாலய அதிபர்]

இடம் : பாடசாலை மண்டபம்

காலம் : 30-5-79 புதன்கிழமை பி. ப. 1-30 சுபவேளையில்

நோக்கம் : பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணம்

பெற்ருேர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை நலன் விரும்புவோர் யாவரும் சமுகம் தரும்படி அன்புடன் அழைக்கின்ருேம்.

சி. ஆ. த. வடிவேலு, ஜே. பி.
காரியதரிசி. 2554

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோடு
ஈடு வழக்கு இல: 395

நட்டுப்பாளி. காரைதீவு மேற்கு.
1. வேலுப்பிள்ளை கதிரவேலுவும்
பெண் 2. கார்த்திகேயணியும் — வாதிகள்
எதிராக

கள்ளித்தெரு. காரைதீவு மேற்கு.
தற்போது சக்தி ஸ்ரோர்ஸ், பரந்தன் சந்தி, பரந்தன்.
நாகமுத்து நாகலிங்கம் — பிரதிவாதி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் ஈடு 395-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1979-ம் ஆண்டு ஜூன் மாதம் 20-ந் திகதி (20-06-79) புதன்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

ரூபா 5,648/-ம், 18-1-1977 [தொடக்கம் 14-7-1977 வரைக்கும் ரூபா 4000/-க்கு 12வீத வட்டியும், அதன்பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும்வரை 9வீத வட்டியும், வழக்குச் செலவு ரூபா 497-55 சதமும்.

### ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரைதீவு கோவிற்பற்று காரைதீவு மேற்கு இறை 'நிற்சியோடை' நி. ப. 3-ம் பனைகள் வடலிகள் வீடுகள் மற்றும் பயிர்களும் எல்லை கிழக்கு: வீரசிங்கம் கைம்பெண் பாறுபதிப்பிள்ளையினுதனம். வடக்கு: வேலுப்பிள்ளை கைம்பெண் சிவகாமிக்கும் நாகலிங்கம் பெண் இராசேஸ்வரிக்குமுரிய வாதனங்கள். மேற்கு ஒழுங்கை. தெற்கு: சோமசுந்தரம் பெண் காமாட்சிப்பிள்ளையினுதனம் இதடங்கலும் இதன் மேற்கெல்லையான ஒழுங்கையிலிருந்து இதன் தெற்கெல்லையருகாக கிழக்கெல்லைக்காணிக்கு போக்குவரவு செய்யும் மூன்றுமுள அகலங்கொண்ட பாதையுரித்துப் பிற நீங்கல்

செ. பாண்டித்துரை,
கொமிஷனர், விலைமதிப்பாளர்.

மல்லாகம்.
8-5-79 2563

## ஈட்டுவழக்கில்விற்பனவுக்கானஆதனம்

யாழ். மாவட்ட நீதிமன்றத்தில்
வழக்கு இலக்கம் ஈடு 387

1. வ. மாணிக்கம் கைம்பெண் யோகம்மா
சுருவில், ஊர்காவற்றுறை — வழக்காளி
எதிராக

1. நாகநாதி சோமசுந்தரம்
வேலணை மேற்கு — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 387-ம் இலக்க ஈட்டு வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1979 ம் ஆண்டு ஆனி மாதம் 19-ந் திகதி முற்பகல் 10-30 மணிக்கு அந்தக்காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 6000/- மேலும் ரூபாய் 3000-க்கு 3-1-77 தொடக்கம் வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 12 வீத வட்டியுடன் முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை அறவிடப்படும் வழக்குச் செலவு ரூபாய் 582-75 சதம். (இதில் நடைபெற்ற செலவு ரூபாய் 340/- நடைபெற வேண்டிய செலவு ரூபா 136-43. மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 106-32]

### ஆதன விபரம்

வடமாககாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரவணையும், கரம்பனும் இறை "குமிளந்தனையும் ஒரு கொப்புப் புளியடியும் நெ. ப. 22 இதில் தெற்குப்பக்கமாக சீதனம் கொடுபட்ட நெற்பரப்பு 10 நீக்கி மீதி வடக்குப் பக்கமாக நெ ப. 12. எல்லை கிழக்கு: முருகேசு பெண் இராசம்மாவின் ஆதனம். வடக்கு: ஒழுங்கையும் சோமசுந்தரம் பெண் இராசம்மாவின் ஆதனம். மேற்கு: இராசலிங்கம் பெண் இராசம்மாவுக்கும் கிருஷ்ணபிள்ளை பெண் அன்னபூரணிக்குமுரிய ஆதனங்கள். தெற்கு: சண்முகநாதன் பெண் பரமேஸ்வரிக்கும் தம்பியப்பா நடராசாவுக்கும் உரிய ஆதனங்கள் இதடங்கலும். இன்னும் மேற்கெல்லையில் இருக்கும் நாகநாதி ஆறுமுகத்தின் காணிக்கு ஊடாகப் போக்குவரத்துச் செய்யும் பாதையுரித்தும். ஆனுல் இக்காணிக்கு ஊடாக மேற்கெல்லையில் இருக்கும் நாகநாதி ஆறுமுகத்தின் காணிக்கு போக்கு வரவு செய்யும் வழிப்பாதை உரித்துடபுற நீங்கல்.

ப. நா. தருமலிங்கம்,
யாழ். மாவட்ட நீதிமன்ற ஏலவிற்பனையாளர்.

167/1, கோவில் வீதி,
நல்லூர் - வடக்கு.
22-5-79. 2553

## கேள்விப்பத்திர அறிவித்தல்

ஊர்காவற்றுறை பகுதி நிறைவேற்றுப் பொறியியலாளர் அவர்களால் கீழ்வரும் வேலைகளுக்காகக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. இதற்குரிய கேள்விப் பத்திரங்கள் 25-05-79ம் திகதியிலிருந்து 31-05-79ம் திகதி நண்பகல் 12-00மணிவரை வேலணையிலுள்ள நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

### வேலை விபரங்கள்

1. விளான்-ஊருண்டி ஆகிய இடங்களில் இருக்கும் திணைக்கள கற்குளியிலிருந்து கற்களை வேண்டிய வேலைத் தலங்களுக்கு ஏற்றிச் சென்று பறித்து பயில்செய்து கொடுத்தல். [இவ்வேலைக்கு பதிவு செய்த ஒப்பந்தகாரர்களும், கிராம அபிவிருத்திச் சங்கங்களும் விண்ணப்பிக்கலாம்]

2. ஊரதீவு - சோழனோடை இறுப்பிட்டி வீதியில், 1-ம் 2-ம் கட்டையிலுள்ள மண் நிரப்பல் வேலை. (இவ்வேலைக்கு பதிவுசெய்த ஒப்பந்தகாரர்களும், கிராம அபிவிருத்திச் சங்கங்களும் விண்ணப்பிக்கலாம்)

இவ்விடங்கள் சம்பந்தமாக மேலும் விபரங்கள் தேவைப்படின் வேலணை நிறைவேற்றுப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

சி. கணேசரத்தினம்,
பிரதான பொறியலாளர்
(பெருந்தெருக்கள்)
2550 யாழ்ப்பாணம்.

க. பரமசிவம்பிள்ளை
சட்டத்தரணியும்
நொத்தாரிசும்
பலாலி ரோட்,
யாழ்ப்பாணம்.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட
நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் மானிப்பாய் ரோட்டு 142-ம் இலக்கத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற. சுல்தான் அப்துல் காதர் அப்துல் சலாம் என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்.

சுல்தான் அப்துல் காதர் அப்துல் ஸலாம் கைம்பெண் முகமத் ஹௌத் றபீக்கா. 142, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம்.

மனுதார்.

மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல. 3450.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில், அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ம் ஆண்டு ஆனி மாதம் 15-ம் திகதி முற்பகல் 10.00 இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படு கின்ருர்கள்.

நீதிமன்றக்கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்

1979 வைகாசி 15-ம் திகதி.

தயாரித்தது:

க. பரமசிவம்பிள்ளை

மனுதாரின் பதிவுபெற்ற தரணி. 2536

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட தஞ்சாவூர் வீணை விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம். செல்வசிராளன் சங்கீத பூஷணம், 134. பிரதான வீதி. யாழ்ப்பாணம். 2561

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட
நீதிமன்றம்

மல்லாகம் என்னுமிடத்தைச் சேர்ந்த நன்னித்தம்பி விசுவலிங்கம் கைம் பெண் தங்கமுத்தம்மாள் என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தினது விடயத்தில்.

மரணமெய்தியவர்

விசுவலிங்கம் மார்க்கண்டபிள்ளை குமாரசுவாமி
லிங்கஸ்தான், மல்லாகம்.

மரணசாதன ) மனுதார்
நியாயாதிக்கம் ) இல. T/37

எதிராக

1. விசுவலிங்கம் சபாரட்ணம், மல்லாகம்
2. வைத்தியகலாநிதி விசுவலிங்கம் நமசிவாயம், மல்லாகம்
3. விசுவலிங்கம் தையல்நாயகி, மல்லாகம்
4. வைத்தியகலாநிதி விசுவலிங்கம் குகதாசன், மல்லாகம்.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979ம் ஆண்டு ஆனி மாதம் 1ஆந்நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னரே தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
மு. நல்லலிங்கம்
பதிவாளர்

தயாரித்தவர்
கு. விசுவலிங்கம்
மனுதாரின்
சட்டத்தரணி

1979ம் ஆண்டு சித்திரை மாதம் 9ஆந்நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 2540

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சப்பல் வீதியில் [1-ம் குறுக்கு வீதிக்கு அருகாமையில்] இரண்டுகடைகள் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு ஆர். செல்லையா அன் கோ, 281/A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2558

மண்ணெண்ணெயில் கோழிக் குஞ்சு பொரிக்கும் மிஷின் பெட்டி இரண்டு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். க. செ. இருதயம், 98, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம். 2537

### கல்வி

German Language ஜேர்மன் பாஷைக்கான ஆரம்ப வகுப்புகள் 1-6-79 தொடங்குகின்றன. தொடர்பு கொள்க: சபாநாயகம் "றாடிக் கொட்" 33, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 2560

ஆர். எம். இமாம்
சட்டத்தரணியும்,
பிரசித்த நொத்தாரிசும்
யாழ்ப்பாணம்.

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட
நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை கைம்பெண் பொன்னம்மா என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்துகளின் விடயத்தில்

மரணமெய்தியவர்.

வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை மாகிலாமணி,
110 புங்கங்குளம் ரோட்
யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணச்சொத்து )
நியாயாதிக்கம் ) இல. 3446

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச் சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979ம் ஆண்டு ஆனி மாதம் 15ம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகா தென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்ருர்கள்.

1979ம் ஆண்டு வைகாசி மாதம் 23 ம் திகதி

நீதிமன்றக்கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்.
பதிவாளர்

தயாரித்தது:
ஆர். எம். இமாம்
மனுதாரின் பதிவு பெற்ற தரணி. 2545

உ

## திருமண அழைப்பு

| மணமகன்: | மணமகள்: |
|---|---|
| கேதீஸ்வரசர்மா — | நாராயணி |
| (கண்ணப்பா) | (கௌரி) |

இடம்: கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானம்
முகூர்த்தநேரம்: 27-5-79 ஞாயிறு
காலை 9-30 மணி முதல்

வரவேற்புபசாரம்:
27, 28-5-79 மணமகள் இல்லத்தில் மாலை 4 மணி
30-5-79 மணமகன் இல்லத்தில் மாலை 4 மணி

உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் குடும்ப சமேதராக அன்புடன் அழைக்கின்ருேம்

| சிவஸ்ரீ | சிவஸ்ரீ |
|---|---|
| ச. சுப்பிரமணியபட்டர் | கு. நகுலேஸ்வரகுருக்கள் |
| பிரதமகுரு, | நகுலேஸ்வர ஆதீனம், |
| திருக்கேதீச்சர | கீரிமலை. |
| தேவஸ்தானம், | 2542 |

யாழ். மாநகரசபை:

# 55 லட்சம் ரூபா நிரந்தர இருப்பில்; 25 லட்சம் ரூபா ரெண்டர்மூலம் வசூல்!

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணம் மாநகரசபை 1975ம் ஆண்டு கலைக்கப்பட்ட போது சபையில் 1,50,331 ரூபா மட்டுமே இருந்தது. தற்பொழுது சபையில் 55,11,000 ரூபா உள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபை விசேஷ ஆணையாளர் திரு. கே. சிவஞானம் என்னிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாநகரசபை கமிஷனராக இருந்த திரு சிவஞானம் 77ம் ஆண்டு ஜூலை மாதம் விசேஷ ஆணையாளராகப்பதவியேற்றார். அவருடைய பதவி இம்மாதம் 31ம் திகதியுடன் முடிவடைகிறது.

## விசேஷ ஆணையாளர் நியமனம்

மேயராகக் கடமையாற்றிய அல்பிரட்துரையப்பா கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து சட்டத்தரணி வி. நடராசா 75ம் ஆண்டு ஆகஸ்ட் 11ம் தேதி விசேஷ ஆணையாளராக நியமிக்கப்பட்டார். அவர் 76ம் ஆண்டு ஆகஸ்ட் 4ம் திகதிவரை பதவிவகித்தார். அதன்பின் மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. ஏ ஜோசப் 76ம் ஆண்டு ஆகஸ்ட் 12ம் தேதி யாழ். மாநகரசபை விசேடஆணையாளராகப்பதவியேற்று, 77ம் ஆண்டு ஜூலை 27ம் திகதி வரை கடமையாற்றினார். இதன்பின் திரு. கே சிவஞானம் விசேட ஆணையாளரானார்.

## புதியவரிகள் எதுவும் அறவிடப்படவில்லை; வரியிறுப்பாளர்களுக்கு பல நன்மைகள்

### ஆணையாளர் சிவஞானத்தின் 'சாதனை!'

துடிதுடிப்புள்ள இளைஞராககாணப்பட்ட திரு சிவஞானம் அபிவிருத்தியிலும் மக்களை முன்னேற்றுவதிலும் ஆர்வம்கொண்டவர். மக்கள் மீது எவ்வித புதிய வரியையும் அறவிடாமலே, நவீன மார்க்கட் மூலம், நகரஅபிவிருத்திக்காக இருபது லட்சத்திற்குமேல் வசூலித்துள்ள பெருமை இவரையே சாரும்.

திரு அல்பிரட்துரையப்பா மேயராக இருந்த காலத்தில், நவீனமார்க்கட் 1ம் கட்ட கடைகள், டெண்டருக்குப்புறம்பாக வாடகைக்கு கொடுக்கப்பட்டது. இதன் மூலம் ஒவ்வொரு கடையிலுமிருந்து ஒரு வருடப் பணத்திற்கு சமமான பணம் மட்டுமே முற்பணமாகக் கிடைத்தது. திரு சிவஞானம் மாநகர சபை கமிஷனராக 75ம்ஆண்டு ஆகஸ்ட் 12ம் திகதி நியமிக்கப்பட்டார். அவரது திறமையினாலும், ஆர்வத்தினாலும், சேவையினாலும், விசேடஆணையாளரானார்.

யாழ் மாநகரசபை கலைக்கப்பட்டபோது எத்தனை ஊழியர்கள் இருந்தார்கள்? என்று கேட்டேன்.

### 1450 ஊழியர் இருந்தனர்

சபை கலைக்கப்பட்டபோது 1450 ஊழியர்கள் கடமையாற்றினார்கள் என்று கூறிய அவர், இவர்களில் சில, அமைய ஊழியரும், பதில் ஊழியரும் தற்காலிக ஊழியரும் அடங்கியிருந்தனர் என்றார்,

மேலதிக ஊழியர்களை நீக்குவது என்ற முடிவுக்கிணங்க 270 மேலதிக ஊழியர்கள் நீக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

-கா. யோகநாதன்-

திரு. சிவஞானம் மேலும் கூறியதாவது:

"சபைகலைக்கப்பட்டபோது மாதாந்த சம்பளம்பெறும் ஊழியர்களும் நிரந்தர ஊழியர்களும் 702 பேர் இருந்தனர். மற்றையோர்கள் 763 பேர் இருந்தனர். இவர்கள் எல்லாரும் அமயஊழியரும், பதில் ஊழியரும், தற்காலிக ஊழியருமாவர்.

கேள்வி: தற்பொழுது எத்தனை பேர் நிரந்தர ஊழியராக உள்ளனர்?

பதில்: இம்மாதம் முடியும் வரை 1130 ஊழியர்கள் நிரந்தர மாதச்சம்பளம்பெறும் ஊழியர்களாக இருப்பார்கள். கடந்த சபையின் காலத்தில் திட்டமில்லாதவாறு, தேவையற்ற நியமனங்களால், நாங்கள் தொழிற்சங்கங்களின் வேலைநிறுத்தங்கள் உட்பட, ஊழியர் பிரச்சினைகளை எதிர் நோக்கவேண்டியிருந்தது.

கேள்வி: வேலை நிறுத்தம் எப்போது நடந்தது?

பதில்: கடைசியாக வேலை நிறுத்தம் 78 ஜனவரி 30ம் தேதி நடந்தது?

கேள்வி: பிரச்சினை எப்படி தீர்க்கப்பட்டது?

பதில்: ஊழியர்களின் சகல பிரச்சினைகளும், அவர்களுக்கு மாதாந்தச் சம்பளத்துடன், வேலை நிரந்தரமாக்கப்பட்டு தீர்க்கப்பட்டதுடன் இல உரிமைகளும் வழங்கப்பட்டன.

கேள்வி: ஊழியர்களின் ஏதாவது கோரிக்கை தீர்க்கப்படாமலிருக்கிறதா?

பதில்: உள்ளூராட்சிசேவையில் ஊழியர்களை சேர்க்க வேண்டுமென்ற கோரிக்கை மட்டும் இன்னும் தீர்க்கப்படாமலிருக்கிறது. இவ்விடயத்தை மக்களால் தெரிவு செய்யப்படும் சபைக்கு விட்டு விட தீர்மானித்துள்ளேன்.

### அபிவிருத்தி வேலைகள்

விசேட ஆணையாளர்காலத்தில் நடந்த அபிவிருத்திவேலைகள் பற்றி அவரிடம் கேட்டேன்.

நல்லூர் கல்யாண மண்டப வேலை பூர்த்திசெய்யப்பட்டதென்றும், நவீனமார்க்கட், 1ம் கட்டடத்தில், கஸ்தூரியார் வீதிக்கு மேலாக பாலம் போடப்பட்டதென்றும், இதற்கு ரூபா 31,452-78 சதம் செலவானதென்றும் கூறினார்.

பண்ணையில் 10 ஆட்டிறைச்சிக் கடைகள் ரூபா 92,998-07

[6ம் பக்கம் பார்க்க]


**தொழில் நுட்ப ஆலோசனைகள்**

கைத்தொழில் நிலையம் ஸ்தாபிக்க, விஸ்தரிக்க தொழில் நுட்ப நிர்வாக ஆலோசனைகளுக்கு தொடர்பு கொள்ளவும். விண்ணப்பிக்கவும்:
விளம்பர இல: 2548,
C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்.
2548


## மக்கள் கருத்து

### சாவகச்சேரியின் முக்கியதேவை

சாவகச்சேரி நகரசபை நிர்வாகத்தை, மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பொறுப் பேற்கவுள்ள சமயத்தில், இதுவரை காலமும் நிர்வாகத்தை நடத்தியவர்களாலும், விசேஷ ஆணையாளராலும் கூட கவனிக்கப்படாத ஒரு விஷயத்தை, புதிய நிர்வாகத்தினராவது கவனிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

சாவகச்சேரி அரசினர் வைத்திய சாலையிலிருந்து வாடி வீடு வரை உள்ள பிரதான வீதியே நகரின் மையமாக உள்ளது. ஆனால் இவ்வீதியின் நிலையோ மிகப்பரிதாபமானது. வீதியின் இருமருங்கிலும் படிந்து கிடக்கும் மணல், பாதசாரிகளுக்கும், சைக்கிளோட்டிகளுக்கும், வியாபாரஸ்தாபனங்களுக்கும் பெரும் கஷ்டத்தை விளைவிப்பதாகவே உள்ளது.

காற்றுக் காலத்தில் இதன் விளைவை வர்ணிக்க இயலாது. சுமார் அரை அடி ஆழம் வரை மணல் படிந்து உள்ளது. வாகனங்களை, விலத்திச் செல்ல முற்படும் வாகனங்கள், புழுதியை இறைத்தும் பாதசாரிகளை மணலில் விழுத்தியும் செல்கின்றன. நகரில் நவீன சந்தை யொன்று தற்சமயம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் இவ்வீதி தொடர்ந்தும் இப்படியே இருந்தால் நவீன கட்டிடங்களை எழுப்பினாலும் வர்த்தக ஸ்தாபனங்கள் தமது நிலையங்களை சிறப்பான முறையில் பேணமுடியாது என்பதையும் புதிய நிர்வாகத்தினர் உணர்ந்து, மணலை அகற்றி வீதியை அகலமாக்கி நகரை அழகுபடுத்துவதுடன், வரியிறுப்பாளர்களின் நீண்ட காலக்கஷ்டத்தையும் நிவர்த்தி செய்வார்கள் என்று நம்புகிறேன்.

ச. நடராசதினராசா, சாவகச்சேரி.


# சிறந்த அறுவடையை உறுதி செய்ய லோஸ்பான்®

INTASEL




உறுதியாகச் செயலாற்றும், பரந்த செறிவுள்ள இந்தப் பூச்சிக் கொல்லி நெல், பருத்தி, புகையிலை, மிளகாய், வெங்காயம், காய்கறிகள் ஆகிய பெறுமதிமிக்க பயிர்களை இலை, தண்டு மூலம் அல்லது மண்ணிலிருந்து தாக்கும் பூச்சிகளிலிருந்து பாதுகாக்க மீண்டுங்கிடைக்கிறது.



லோஸ்பான் நெற் பயிரைத் தாக்கும் தண்டுப் பூழுவை அழிப்பதற்கும், ஒழிப்பதற்கே கடினமான வெங்காயப் பயிரைத் தாக்கும் ஸ்போடோப்டெரா எக்ஸிகுவா பூச்சியை அழிப்பதற்கும் சாலச் சிறந்தது. எல்லா விதப் பூச்சி வகைகளிலிருந்தும் பாதுகாப்புப் பெற்றுக் கொள்ள வகை, வகையான மருந்துகளில் நீங்கள் தங்கியிருக்க வேண்டியதில்லை – அவை எல்லாவற்றையும் லோஸ்பான் கொல்லுகிறது... நேரடியாக்கப்பட்டும், உட்புகுந்தும், ஆவியாகப் பரந்தும் செயலாற்றுகிறது.



இரசாயனப்பிரிவு,
மஹாராஜா ஓர்கனைசேசன் லிட்.
54, பாங்கஷோல் வீதி, கொழும்பு – 11.
தொலைபேசி: 23603.

டவ்கெமிக்கல் ஸ்தாபனத்தின் (அ. அ. நா.) வர்த்தகச் சின்னம்

# பல்துறை அறிஞர் செல்வநாயகம் ஏற்றபணி முடிக்குமுன்னர் இறைவனடி சென்று விட்டார்

பேராசிரியர் சோ. செல்வநாயகம்; யாழ் இந்துக்கல்லூரியிலும் கொழும்பு சாகிராக் கல்லூரியிலும் தமது ஆரம்பக் கல்வியைப் பெற்று, 1953 ம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழகத்தில் புவியியல் பட்டதாரியாகப் பட்டம் பெற்று, அரசகரும மொழித் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளராகவும் பின்னர் 1959 ல் பேராதனையில் துணை விரிவுரையாளராகவும் பணியாற்றி, 61 ல் லண்டன் பல்கலைக் கழகத்தில் எம். ஏ. பட்டம் பெற்று 63 ல் நாடு திரும்பினார்.

இதனைத் தொடர்ந்து "லண்டன் பல்கலைக் கழகத்தில் டாக்டராகப் பட்டம் பெற்று, 74ல் இலங்கைப் பல்கலைக்கழக சேவையில் இருந்து விலகி, நைஜீரியா சென்று பணியாற்றிய இவர் 77 முதல் யாழ்ப்பாண வளாகத்தில் புவியியல் பேராசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார்.

## பல்துறை அறிஞர்

புவியியல், வரலாறு, சமயம், கலை என்பன அவரது துறைகள். அவற்றுள் முதன்மையானது புவியியல் நிலப் பாட்டை தனது சிறப்பு ஆராய்ச்சிப் பகுதியாக வகுத்து யாழ்ப்பாண நிலப் பயன்பாட்டை முதலில் ஆராய்ந்து பட்டம் பெற்றார். பின்னர், கிராமியப் புவியியல் இவரது தனிச் சிறப்பு உடைய துறையாகியது. இதனால் சாதாரண விவசாயிகளுக்கும் பயன்படக் கூடிய ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு, சேவையாற்றும் வாய்ப்பு இவருக்கு கிட்டியது. பொருளியலிலும், ஈடுபாடு கொள்ளச் செய்தது. அதனால் பொருளியற் புவியியல் வழியாக பொருளியியல் சார்ந்த ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டு, பொருளியற்துறையில் எம்.ஏ படிக்கும் ஆராய்ச்சி மாணவர்

### யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினர்

யாழ். வளாகத்தில் பதவி ஏற்றதும், இலங்கையில் வேறு எந்த வளாகங்களிலும் இல்லாத ஓர் ஆய்வுத்துறையான 'கிராமியவியல்' ஒன்றைத் தனது புவியியற் துறையில் புகுத்தி, கிராமத்தவருக்கும் பயன்தரக் கூடிய புவியியல் ஆய்வைத் தொடக்கி வைத்தார் இதனை நன்கு நிகழ்படுத்த முன்னர் அவர் மறைந்தது பேரிழப்பாகும்!

கிராமியவியல், அவரை களுக்கு மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டார்.

## ஆராய்ச்சிக் கட்டுரைகள்

புவியியலைப் பொருளியலோடு மட்டும் அன்றி, வரலாற்றுடன் இணைத்து ஆராயும் திறன் இவருக்கு இருந்தது இதனால் பழந்தமிழருடைய, ஐந்திணைப் பகுப்பினையும் நவீன புவியியல் நிலப்பகுப்பினையும் ஒப்பிட்டு, ஆராய்ந்தும், பழய தமிழ் நாட்டின் நிலப்பயன்பாட்டு முறையை ஆராய்ந்தும் மருதநில அமைப்பினை ஆராய்ந்தும் கட்டுரைகளை வெளியிட்டார். இவை எலலாவற்றிற்கும் ஊடாக இழையோடியது தமிழியலாகும்.

புவியியல் ஆராய்ச்சி எனினும் சிறப்பாக அது தமிழ்ப் பிரதேசம் சார்ந்ததாக அமைந்தது. கிராமியவியலும் அவ்வாறே வரலாற்றுப் விபுயியலும் தமிழ்நாடு சார்ந்ததாக, தமிழ் இலக்கிய சான்றினை அடிப்படையாகக் கொண்டதாய் அமைந்தது. புவியியல் நூல்களை தமிழால சிறப்புடன் இவரால் மொழி பெயர்க்கப்பட்டன சந்தர்ப்பம் ஏற்படும் போதெல்லாம், தமிழ் இலக்கிய விஷயங்கள்பற்றி உரையாற்றுவார் தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகளில் பங்கு பற்றி பழந்தமிழர் புவியியல் கருத்துக்கள பற்றி ஆய்வுரைகள் நிகழ்த்தினார்கள தமிழியல் ஆர்வமேலீட்டினால் கண்டியில் தமிழியற் கழகம் என்று ஒரு கழகத்தை நிறுவினார்

## பிரதேச ஆய்வு

சமயத்துறையிலும், ஈடுபாடு கொண்டு, யாழ் பல்கலைகழக இந்துமன்றத்தின் பெருந்தலைவராகப் பணியாற்றிய இவர், இந்து நிறுவனங்களில் உரைநிகழ்த்தினார், அவர் இறுதியாகச் செய்துகொண்டிருந்த முக்கிய ஆராய்ச்சி, சாவகச்சேரிப் பிரதேச ஆய்வாகும். இது தமிழ்ப்பிரதேச ஆராய்ச்சியின் தொடக்க கட்டமாக அமைகின்றது. முன்னேறிக் கொண்டிருந்த இந்த ஆராய்ச்சியை முற்று வகரும் முன்னரே, அகால மரணம் ஏற்பட்டுவிட்டது! இந்த ஆய்வு அவர் மூலம் யாழ் பல்கலைக்கழகம் சமுதாயத்திற்கு ஆற்றிய முக்கிய சேவையாக அமைந்திருக்கும்.

மறைந்த பேராசிரியருக்கு, நிறைந்த எதிர்காலம் ஒன்று காத்திருக்கிறது என்றே நாம் எல்லோரும் எண்ணிவந்தோம். அது பொய்த்துவிட்டது.

தனது துறைகளில் ஆராய்ச்சியாளராக இருந்ததோடு ஒரு பல்கலைக்கழக அறிஞர் என்றவகையில், எமது இளம் பல்கலைக்கழகத்துக்குத் தேவையான சில அறதியாவசிய பண்புகளைப் புகுத்த பெரிதும் முயன்றமை மறக்கமுடியாது. பேராசிரியர் செல்வநாயகம் தனது துறையிலும், பொதுப்படப் பல்கலைக்கழகத்திலும், தொழில் ஒழுக்கம் தேவை என்பதை வற்புறுத்தினானே அதற்கு எடுத்துக்காட்டாக விளங்கி, தன் துறையினரையும் அந்நெறிப்படுத்தினார் பல்கலைக்கழகத்தினர் ஆராய்ச்சயில் ஈடுபடவேண்டும் என ஆணித்தரமாக எடுத்துரைத்து அதற்கான வசதிகள் இருக்கவேண்டும் என்றும் போராடினார் இத்தகைய ஆராய்ச்சி வசதிகளை தனது துறையிலேயும் ஏற்படுத்திக்கொண்டு வந்தார். பல்கலைக்கழகத்தின் சீரான நிர்வாகத்தில் அக்கறை கொண்டு நிர்வாகப்பேரவையில் அருஞ்சேவை புரிந்தவர் அமரர் செல்வநாயகம் என்றால் மிகையாகாது. ஆனால் இத்தனை முயற்சிகளும் பயனளிக்க முன்னர் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார். அன்னாரது பெயர் இந்தப் பல்கலைக் கழகத்தில் என்றும நிலைக்கும என்பதில் ஐயமில்லை.

கடமையுணர்ச்சிமிக்கவராகவும பிள்ளைப்பற்று நிறைந்த பிதாவாகவும வாழ்ந்த பேராசிரியர், தன் அருமைமனைவி தயாநிதியையும தவப்புதல்வர்களையும தனி ஒரு புதல்வியையும அவர் எனது வாழ்வு மலரமுன்னரே விட்டுச் சென்றது அவர் குடும்பத்திற்குப் பேரிழப்பாகும, இத் தருணம அவர்களுக்கு ஆறுதல கூறி பேராசிரியரவர்கட்கு நன்றிநிறைந்த அஞ்சலியை செலுத்துகின்றோம,



# முழங்காவிலில் விவசாயிகள் விழா

[யாழ்ப்பாணம்]

முழங்காவில் இளம்விவசாயிகள் கழக விழா எதிர்வரும் 31ம் திகதி வியாழக்கிழமை மாலை கழகத் தலைவர் பே. கோபாலலிங்கம் தலைமையில் முழங்காவில் கமநலசேவை நிலையத்தில் நடைபெறவுள்ள யாழ். மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. நா. சிவமுத்துலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

பெரும்பாக உத்தியோகஸ்தர் திரு. கே. சந்திரசேன், திரு. வி. சோமஸேஸ்வரன், ரி. மரியநாயகம் உட்படப் பலர் சிறப்புரையாற்றுவர்.

[கு]

# மாவை சேனாதிராஜா யாழ். வந்தார்

(மாவிட்டபுரம்)

சிறையிலிருந்து மீண்ட மாவை சேனாதிராஜா மாவிட்டபுரத்திலுள்ள தமது இல்லத்திற்கு வந்துசேர்ந்துள்ளார். மட்டக்களப்பில்வைத்துக் கைதாகி பலமாதங்களாக சிறையில் வைக்கப்பட்டிருந்த பின் அண்மையில் விடுதலையான மாவைசேனாதிராஜாவை மாவிட்டபுரத்திலுள்ள அவரது இல்லத்தில் தினமும் ஏராளமானோர் சந்தித்து உரையாடுகிறார்கள்

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள், இளைஞர் பேரவையினர், இளைஞர்கள் ஆகியோர் அவரை ஆவலுடன் சந்தித்துப் பேசுகிறார்கள்.




பெரு லாபம் பெற
கிரமக்சோன்
நெல் வயலில்
முறையைப் பாவியுங்கள்

கிரமக்சோன் முறை இதோ!

- பயிரிடும் முன் வயலில் நீர் வடிய விட்டுக் களைகளை வளரச் செய்யுங்கள்.
- வெப்பு 'பொலிஜெட்' குழாய் முனை கொண்ட தெளிகருவி மூலம் 1 கலன் நீரில் 1 அவுன்ஸ் கிரமக்சோன் கலந்து தெளியுங்கள்.
- 1 ஏக்கருக்குத் தெளிக்கையில் 4 அவுன்ஸ் தெளி கலவையை மீதம் வையுங்கள்.
- மறுநாள், தவற விட்ட இடங்களில் இதைத் தெளியுங்கள்.
- 3 முழு நாட்கள் கழிந்ததும் களைகள் முற்றுக கும்படி வயலில் நீர் பாய்ச்சுங்கள்.
- 5 நாட்களின் பின் மீண்டும் நீர் வடிய விட்டு உழுங்கள்.
- பரம்படித்து, உலர் புனை தெளித்த பின் விதையுங்கள்; அல்லது நாற்று நடுங்கள்.

% விளைச்சல் ஏக்கருக்கு 12 புசல் விதம் அதிகரிக்கும்.

கிரமக்சோன் முறை தரும் பயன்கள் இதோ!

- ஏர் உழவுச் செலவு மிச்சப்படும்.
- மண் உழவதற்கு இலேசாக மெதுமைப்படும்.
- பத்து நாளில் பயிரிடும் வேலைகளை முடித்துவிடலாம்.
- மற்றக் களைகளுடன் சல்வீனியாவும் கட்டுப்படும்.
- மண் செதுமையும் பசுமையும் அடைவதால் பயிர்கள் மேலும் செழித்து வளரும்.
- அழுகி உட்கும களைகளும் பயிர்களுக்கு உரப் பசளையாகி விடும்.
- நெல்லோடு புதிதாக வளரும் களைகளும் பெருமளவு கட்டுப்படும்.
- நீர் மிச்சப்படும்; நீர்ப்பாசன நேரமும் குறையும்.

CIC

கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் லிமிட்டெட் (கொழும்பு)

ஹேமாஸ் கட்டிடம், மிஸ்டல் வீதி, த. பெ. எண் 352, கொழும்பு 1. தொலைபேசி: 28421 - 6

[யாழ்ப்பா…
"சாவகச்சேரி …
திரேட்டரில் 'இ…
2ம் காட்சி ப…
என்னையும் மக…
சயிக்கிலில்கூட்ட…
வில் உள்ள குளத்…
தள்ளிவிழுத்தின…
யும் பிள்ளைய…
லாதேயுகிறோ"
"நீயும் பிள்ளையு…
கரைச்சல்' என்…
தில் தள்ளினர்.
சாவகச்சேரி …
கொலைவழக்கில் …
மளித்த நாகலிங்…
[24வயது] மே…
கிறார்.
இவ்வழக்கு யா…
மன்றத்தில் ஜூ…
முன்னிலையில் வி…
யப்பட்டது.
இவ்வழக்கில் …
யில், 77 …
தேதி சரசாவை…
நாகலிங்கம் ச…
என்பவர் அவரது…
முகதாசனை (வ…
தில் தள்ளி கொ…
வும், 8 மாத க…
மனைவி பராசக்…
தில் தள்ளி …
முயற்சித்ததாகவ…
சாட்டப்பட்டிரு…
அரசதரப்பில், …
தரணி ஆர். தவர…
நடத்தினார்.

விவாகம் செ…

பராசக்தி தொ…
யதாவது: "இ…
தாசன் என் …
வயது 5. எதிரி…
என் வீட்டுக்கு…
மீசாலையில் இரு…
எதிரியும், ந…
நெசவு ஆலையில்…
தோம் எதிரி…
முன் அங்கு வே…
என்பது ஞாபக…
எதிரியை சந்தி…
செய்து ஒன்று…
குழந்தை சனிமு…
கும்போது எதிரி…
இல்லை. சரச…



...பாணம்]
...ரி தெய்வேந்திரா
...'இங்கிலிஸ் படம்
பார்த்தபின்னர்
...ளேயும் கணவன்
...ட்டிவந்தார். வழி
...ளத்தில் எங்களை
...ளினர். "என்னை
...யையும் கொல்
...' என்றேன்.
...யும் இருந்தால
...ன்று கூறி குளத்
...ர்.
...ரி குளத்தடி
...ல் சாட்சிய
...லிங்கம் பராசக்தி
...மேற்கண்டவாறு

...யாழ் மேல் நீதி
...ளுப் எம் ஜாமில்
...விசாரணைசெய்

...ல் சாவகச்சேரி
...க்டோபர் 28ம்
...ளையை சேர்ந்த
...சண்முகநாதன்
...து மகன் சண்
...(வயது 5) குளத்
...லை செய்ததாக
...கர்ப்பிணியான
...க்தியை குளத்
...கொலைசெய்ய
...கவும் குற்றம்
...ருந்தது.
...ல், சட்டத்
...வராசா வழக்கை

...செய்தேன்
...தொடர்ந்து கூறி
...இறந்த சண்முக
...குழந்தை.
...ரியை தெரியும்.
...துப் பக்கத்தில்
...க்கிருர். நானும்
...வரத்தினத்தின்
...ல் வேலைபார்த்
...னை வருடத்தின்
...வேலைசெய்தேன்
...கமில்லை. அங்கு
...தித்து விவாகம்
...க இருந்தோம்
...முகதாசன் பிறக்
...திரி என்னுடன்
...சாலையில் அவர்

சாவகச்சேரி கொலைவழக்கு

# 'இங்கிலிஸ் படம்பார்த்தபின் எங்களைகுளத்தில்தள்ளினர்'

## மனைவி பராசக்தி சாட்சியம்

வேறுகலியாணம் செய்துவிட்டார். குழந்தை வயிற்றில் 2 மாதம் இருக்கும்போது என்னை விட்டுச் சென்ருர் என் சகோதரர்கள் தாயார். என்னைக் காப்பாற்றினர்கள்.

### தாபரிப்பு வழக்கு

"எதிரிக்கு எதிராக கோட்டில் தாபரிப்பு வழக்கு போட்டேன் மாதம் 75 ரூபா கட்டும்படி வழக்கு தீர்ந்தது. இரண்டு மூன்று மாதம் காசு கட்டினர். பின் கட்டாமல் விட்ட காலத்திற்கு 1000 ரூபா ஒருமிக்கக் கட்டும்படி தீர்க்கப்பட்டது, அவர் கட்டவில்லை.

### மற்றொரு குழந்தை

நான்கு ஐந்து மாதம் கட்டிய பின் "ஒற்றுமையாக இருப்போம்" என்று சொல்லி வந்தார். 'ஒற்றுமையாக' இருந்தோம். பின் எனக்கு 77ம் ஆண்டு மற்றொரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு இப்போது ஒன்றரை வயது என்னைக் குளத்தில் தள்ளி கொலை செய்ய முயன்றபோது 8 மாத குழந்தை வயிற்றில் இருந்தது. அவர் இடைக்கிடை வந்து போவார்

### சைக்கிலில் போனோம்

சம்பவம் நடந்ததினம், 3 மணிக்கு எதிரி அரிசி சாமான் வாங்கி வந்தார், சமைத்துச் சாப்பிட்டோம் சாவகச்சேரிக்கு உடுப்புகள் எடுக்கப்போனோம இறந்த பிள்ளையும் எங்களுடன் வந்தது. சைக்கிளில் போனோம் சைக்கில் பாரில் ஏற்றிக் கூட்டிச் சென்ருர். டச் ரோட்டால் போனோம் என்வீட்டிலிருந்து சாவகச்சேரி ஒன்றரை மைல் தூரம். 95 ரூபாவிற்கு உடுப்புகள் எடுத்தோம்

"இங்கிலிஸ் படம் பார்க்க வரச்சொன்னர் படத்தின் பெயர் ஞாபகமில்லை வில்லங்கத்திற்குப் போனேன் பொன்னுத்துரை கடைக்குப்போய் சாப்பிட்டோம். மகனும் சாப்பிட்டார் இருட்டிவிட்டது, கடை வாசலில் இருந்தோம் என் தாயார் வந்து "வீட்டைபோய் பார்த்தேன் ஒருதரும் இல்லை" என்ருர் எதிரி படம பார்த்துவிட்டு வருவதாக அமமாவிடம சொன்னர் வெற்றிலை சாப்பிட்டுவிட்டுப் போங்கோ என எதிரி என் தாயாருக்கு வெத்திலை கொடுத்தார் அவரும் பங்கிட்டுச் சாப்பிட்டார்.

தெவேந்திரா தியேட்டரில் இரண்டாம் காட்சி படம் பார்த்தோம். படம் முடியும் வரை பார்த்துவிட்டு கடையில் தேநீர்குடித்தோம், பின்ளைக்கு வாழைப்பழம் வாங்கிக் கொடுத்தார். நான் வீட்டில் சாப்பிடுவோம், என்று சொன்னேன், [பருத்தித்துறை ரோட்டில்] சைக்கிளில் போனோம், பங்களா ரோட்டில் தண்ணீர் மேவிப் பாய்ந்ததால் சைக்கிளிலிருந்து இறங்கி நடந்தோம்,

எதிரி என்னைக் கையில் பிடித்துப் போனர். நான் பிள்ளையை ஏக்கலையில் வைத்துக் கொண்டு போனேன், எதிரி எனது முதுகில் ஒருகையும், மேல்கையில் ஒரு கையும் வைத்து தண்ணீரில் தள்ளி பனையடி குளத்தில் விழுத்தினர், பக்கத்தில் ரோட்டு இருந்தது.

### 3-ம் முறை தள்ளினர்

என்னையும் பிள்ளையையும் கொல்லாதேயுங்கோ, வழக்கு கணக்கிற்கு போகவில்லை' என்றேன், 'நீயும் பிளளையும் இருந்தால் கரைச்சல்' என்று கூறினர், நான் எழும்பினேன், 3-ம முறை தள்ளி விட்டார், என்னை தலையில் பிடித்து நடுக் குளத்தில் தள்ளினர், பிளளை எழும்பிய போது 2-ம் முறையும தண்ணிரில் தளளி கொலை செய்தார்.

எனக்குப் பிறகு என்ன நடந்ததென்று தெரியாது. பபா, பபா என்று கத்தினேன், பின் எதிரி வந்துவிடுவார் எனப் பயந்து பேசாமலிருந்தேன், அவ்விடத்தில் குடிசனம் இல்லை, பின் எழுந்து சென்று சுப்பன் பண்டாரியை கூப்பிட்டேன் அவரிடம நடந்தவற்றை சொன்னேன், பின் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டேன், மகன் இறந்த 3-ம நாள போனேன்

குறுக்கு விசாரணையின்போது இரவு 7 மணி முதல் 9 மணி வரை பொன்னுத்துரை கடையிலிருந்ததாக பராசக்தி கூறினர்,

கேள்வி; இடைக்கிடை எதிரி சாராயம குடித்துவிட்டு வந்தார்?-ஆம்

கே: படத்திற்கு சோடா போத்தலுக்குள சாராயம் கொண்டு வந்தார்?ஆம.

கே: தியேட்டருக்குளவைத்து அடிக்கடி சாராயம் குடித்தார்?-ஆம்.

கே: எதிரி, யோகம்மாவை துப்பரவாக வட்டால் உங்களுக்கு விருப்பம்?-இனிமேல் வேண்டாம.

கே: உன்னை விட்டுவிட்டு எதிரி யோகமமாவை விவாகம செய்தது பிடிக்கவில்லை?

இல்லை.

எதிரியின் மாமி நாகலிங்கம் இராசம்மா [வயது55] சாட்சியமளிக்கையில் சம்பவம் நடந்த தினம் இறந்த குழந்தையின் பிறந்த நாளென்றும் எதிரி வாங்கிவந்த சட்டைகளை குழந்தைக்குப்போட்டு கொண்டாடியதாகவும கூறினர்.

எதிரி இரவு தியேட்டரடியில் வெத்திலை வாங்க 10 சதம் தந்ததாகவும் வெத்திலை சாப்பிட்டதாகவும் கூறினர்.

விசாரணைதொடர்ந்துநடைபெறுகிறது. [ச]

## பயிற்சி வகுப்பு

(புலோலி)

பருத்தித்துறைக் கல்விவட்டாரப் பாடசாலை மாணவிகளுக்கான "ஆத்மீகசன்மார்க்க பயிற்சி" வகுப்பு, பிரதி சனிக்கிழமைகள் தோறும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தினல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இப் பயிற்சி வகுப்பு, அதிபர் செல்வி மார் தலைமையில் நடைபெறவுள்ளது,

## யாருடையது?

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பணிமனையில் கைவிடப்பட்ட மூக்குக்கண்ணுடியொன்று, 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

## சம்பள உயர்வு

[யாழ்ப்பாணம்]

நல்லூர் ப நோ. கூ சங்க ஊழியர்களுக்கு இம்மாதம் முதல் அரசினல் வழங்கப்பட்ட ஐம்பது ரூபா சம்பளஉயர்வு வழங்கப்படும்.

ஊழியர்களின் விருப்பத்திற்கு அமைவாக நெறியாளர் குழு நேற்றுமுன்தினம் மாலை சங்க மண்டபத்தில் கூடி இத் தீர்மானம் எடுத்தது. நெறியாளர் குழுக்கூட்டத்திற்கு மாவட்ட காணிஅதிகாரி திரு. ரி எம் குலநாயகம் தலைமை வகித்தார்.

கடந்த நான்கு மாதங்களாக வழங்கப்படாதிருந்த இச் சம்பள உயர்வு பற்றியும் நெறியாளர் குழுவில் விவாதிக்கப்பட்டு, காசுக்கிரமத்தில் இத்தொகைகளையும் வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. [கே]





ஒவ்வொரு அடியிலும் சௌகர்யம்
பாட்டா
வழங்கும் மொட் 80

...பாட்டா வழங்கும் மொட் 80 செருப்புக்களை அணிந்து வித்தியாசத்தை உணருங்கள்... அழகானது, கெட்டி...யானது, சௌகர்யமானது, மூன்று நவநாகரீக அமைப்புக்கள்... பாட்டாவின் மொட் 80 செருப்புக்கள், நீண்ட கால ...உழைப்புக்கென்றே செய்யப் பட்டவை... ஒவ்வொரு அடியிலும் சௌகர்யம் பாட்டாவின் மொட் 80 செருப்புக்கள்.

ஆண்களுக்கான செருப்புக்களும் சப்பல்களும்

Grant K & E 988

(3ம் பக்கத் தொடர்ச்சி)

# 55 லட்சம் ரூபா நிரந்தர...

சதம் செலவில் கட்டப்பட்டதாகவும் மீன்மார்க்கட் கட்டப்பட்டதுடன் விளையாட்டு அரங்கு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டதென்றும் கூறினர்.

உங்களுடைய நிர்வாககாலத்தில் என்ன அபிவிருத்தி வேலைகள் நடந்ததென்று நான் கேட்டபோது; அவர் சிரித்தபடி "பத்திரிகை நிருபருக்கு தெரியும் தானே' என்ருர்

"தெரியும் ஆனல் விபரமாக தேவை' என்றேன்

77 இனக்கலவரத்தின்போது யாழ்ப்பாணம் பழைய மார்க்கட் எரிக்கப்பட்ட இடத்திலும், பஸ்நிலையத்தில் கடைகள் எரிக்கப்பட்ட இடத்திலும் குறுகிய காலத்தில் புதிய கடைகளை கட்டினேன்.

'இதற்கு எவ்வளவு செலவானது?' என்று கேட்டேன்.

124 கடைகளும் கட்டுவதற்கு 7,25,000 ரூபா செலவானதென்றும், இதற்குள் மின்சார இணைப்பு செலவும் அடங்கும் என்றும் தெரிவித்தார். இக்கடைகள் யாவும் சபையின் நிதியில் கட்டப்பட்டதாகவும் தெரிவித்தார்

கேள்வி: இவற்றைவிட வேறு கடைகள் கட்டப்பட்டதா?

பதில்: பஸ்நிலையத்தில் ரூபா 29,187-18 சதம் செலவில் வேறு மூன்று கடைகள் கட்டப்பட்டது. ஸ்ரான்லிவீதியில் ரூபா 92,562-53 சதம் செலவில் 5 கடைகள் கட்டப்பட்டது.

கேள்வி: இக்கடைகளும் ரெண்டருக்கு வழங்கப்பட்டதா?

பதில்; ஆம். ரெண்டருக்கே வழங்கப்பட்டது.

கேள்வி: வேறு புதிய வேலைகள் எதுவும் நடைபெற்றதா?

பதில்: பண்ணையில் ரூபா 73,594-14 சதம் செலவில் புதிய பஸ்நிலையம் அமைக்கப்பட்டது வீதிகள் போடப்பட்டதும், நேரக்குறிப்பாளர் அறைகட்டப்பட்டதும் இதில் அடங்கும் முற்றவெளி சந்தைப்பகுதியில் பொதுமலசலகூடம் ரூ 13,326-85 சதத்தில் கட்டப்பட்டது

கேள்வி: நவீன மார்க்கட் பற்றி எதுவும் கூறவில்லையே?

பதில்: அதுபற்றி இனித்தான் சொல்லப்போகிறேன் நவீனமார்க்கட் 2ம் கட்ட பகுதி சுமார் 18 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டது இக்கடைகளை ரெண்டருக்கு விட்டதன்மூலம் 23 லட்சம் ரூபா கிடைத்தது. இதுதவிர ஸ்ரான்லி வீதியில் கட்டப்பட்ட கடைகள் ரெண்டருக்கு கொடுத்ததன் மூலம் 2 லட்சத்து 6 ஆயிரம் ரூபா கிடைத்தது பொன்னம்பலம் வீதியில் கட்டப்பட்ட 3 கடைகளை ரெண்டருக்கு கொடுத்ததன் மூலம் 60 500 ரூபா கிடைத்தது நவீன மார்க்கட் முதலாம் பகுதியில் 2 கடைகளை ரெண்டருக்கு கொடுத்ததன் மூலம் 80 000 ரூபா கிடைத்தது புதிய வரிகள் எதுவும் அறவிடப்படவில்லை.

கேள்வி: வேறு என்ன வேலைகள் நடைபெற்றன?

பதில்: பாதுகாப்பு காரணங்களுக்காக மாநகர சபை நிர்வகிக்கும் பொதுக் கட்டடங்களுக்கு மதில்கள் கட்டப்பட்டன. விளையாட்டரங்கு மதிலுக்கு 46,719-80 சதம் செலவானது, சுப்பிரமணியம் பூங்கா மதிலுக்கும், திறந்த வெளி அரங்கு, யாழ். பொது நூல்நிலைய மதிலுக்கும் ரூ. 48,013-00 செலவானது பாஷையூர் பிரசவ விடுதி மதிலுக்கு ரூ. 38,120-75 சதம் செலவானது. நகர மண்டபத்திலும் திருத்தவேலைகள் நடைபெற்றன. சுப்பிரமணியம் பூங்காவிலும், சில திருத்தங்கள் இடம்பெற்றன. இம்மாதம் 18ம் தேதி இரண்டு ரெலிவிஷன்கள் நிறுவப்பட்டன. பொதுநூலகத்திலும் திருத்தங்கள் இடம்பெற்றன. ஏழு ஆண்டுகளாக பழுதடைந்திருந்த திரைப்படக்கருவி திருத்தப்பட்டது. முற்றவெளி மீன் சந்தை, இறைச்சிக்கடை, பஸ் நிலையத்திற்கு நீர்விநியோகம் செய்யப்பட்டது. அங்கு16,000 ரூபா செலவில் ஒரு பொதுமலசலகூடம் நிறுவப்பட்டது. உதிரிப்பாகங்கள் தட்டுப்பாட்டினால் 4வருடங்களாக திருத்தப்படாமல் இருந்த "ரோளர்" 10,000 ரூபா செலவில் திருத்தப்பட்டு, வீதிவேலைகள் நடைபெறுகிறது.

## முனீஸ்வரன் வீதி

"கடந்த 10 வருடங்களாக கவனிக்கப்படாமலிருந்த முனிஸ்வரம் வீதி 85,000 ரூபா செலவில், புதிதாக அமைக்கப்பட்டது. இம்முனீஸ்வரன் வீதியில் உள்ள காணியை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் காணியில் மரக்கறி சந்தை அமைக்கப்படும்.

கேள்வி: தற்போதைய மரக்கறிசந்தை எதற்கு பாவிக்கப்படும்?

பதில்: அதனை புதிய சபை முடிவு செய்யும்.

கேள்வி: அதில் நவீன மார்க்கட் 3வது கட்டம் அமைக்கப்படுமா?

பதில்: அது பற்றியும் சபை தான் தீர்மானிக்கும்.

கேள்வி; வேறு என்ன அபிவிருத்திவேலைகள் நடைபெற்றன?

பதில்: சி. பொன்னம்பலம் வீதியிலுள்ள பழுதடைந்த பாலம், 495,760 ரூபா செலவில் முற்றாக திருத்தியமைக்கப்பட்டது. செங்குந்தார் சந்தையில் 27-000 ரூபா செலவில் கட்டடம் அமைக்கப்பட்டது. நான்கு, 4சக்கர டிராக்டர்களும், 2 சக்கர டிராக்டர் ஒன்றும், 469,760 ரூபா செலவில் சபைக்காக வாங்கப்பட்டது குருநகர் நீர்த்தாங்கிக்கு, எல்லை மதில், 18,605 ரூபா செலவில் கட்டப்பட்டது கோண்டாவிலிலுள்ள நீர் இயக்கி நிலையத்திற்கு, 3,432 ரூபா செலவில் எல்லைவேலி போடப்பட்டது.

கேள்வி: விசேட ஆணையாளர் காலத்தில் வீதிகளுக்கு எவ்வளவு செலவிடப்பட்டது?

பதில்: 77ம் ஆண்டு ரூபா 2,25,164-60 சதமும், 78ம் ஆண்டு ரூபா 7.12.913-53 சதமும், 79ம் ஆண்டு ரூபா 2 31,659-54 சதமும் செலவிடப்பட்டது. கடந்த 6 மாத காலமாக வீதிப்பராமரிப்புக்கு தார் கிடைப்பது தட்டுப்பாடாக இருந்தது

'யாழ் பீச்' ஒன்று அமைக்கப்பட்டது. இந்த பீச்சில் சக்திமிக்க மின்ஒளிகள் பொருத்தப்பட்டது இந்த பீச்சுக்கு 45,000 ரூபா செலவானது.

கேள்வி: மின்சார விநியோகத்தில் என்னென்ன அபிவிருத்தி செய்யப்பட்டது?

பதில்: கலட்டி, மனோகரா சந்தி, சிவப்பிரகாசம் வீதி, அரியாலை, உப்புகுளம் ஆகிய இடங்களில் 5 மின் உபநிலையங்கள் திறக்கப்பட்டது. செம்மணி வீதி, நாயன்மார்கட்டு கனகரத்தினம் வீதி, பெரிய தம்பிரான் கோவில் ஒழுங்கைக்கு மின்விஸ்தரிப்பு செய்யப்பட்டது. 10,000 ரூபா செலவில் முத்திரைசந்தியிலும் தட்டாதெருவிலும், உபசெயலகங்கள் நிறுவப்பட்டது.

கேள்வி: வேறு புதிய வேலைகள் உண்டா?

பதில்: பாஷையூர் பிரசவ விடுதிக்கு 152,000 ரூபாவும், வண்ணார்குளம் அபிவிருத்திக்கு 132,200 ரூபாவும், வண்ணார்குளம் லொறி நிலையத்திற்கு 14,500 ரூபாவும், முற்றவெளி சந்தைக் கடைகள் அபிவிருத்திக்கு 26,500 ரூபாவும், வாடிவீடு அபிவிருத்திக்கு 34,500 ரூபாவும் சிறுவர்பூங்கா அபிவிருத்திக்கு

(7ம் பக்கம் பார்க்க)

வாங்கத்தூண்டுவது!
ராற்ருங்
டெலிவிஷன்
12" கறுப்பு வெள்ளை போட்டபிள் மோடல் 12 PD/PC
உலகிலுள்ள மாபெரும் நிறுவனமொன்றினுல் சிங்கப்பூரில் தயாரிக்கப்பட்டு, போட்டிபோடமுடியாத விலையில் விற்கப்படுகிறது.



ராற்நங் PAL 625 B முறையில் மின்சாரத்திலோ, பாட்டரியிலோ VHF 2-12 UHF 21-69 சனல்களில் இயங்குவது. நல்ல பலமான பெட்டியில் UHF/VHF அன்ரானு உள்ளடக்கியது.
இதனுல் நீங்கள் நன்கு பார்த்து மகிழலாம் ஆகையால் பிரத்தியோகமாக வெளியில் அன்ரானு இணைக்கத் தேவையில்லை வேர்ல்டேஜ் ஸ்டாபிலைஷர் இணைந்திருப்பதால் தங்குதடையின்றி சேவை செய்யும்.
வெளியிலோ உங்களின் காரில் பிரயாணம் செய்யும் பொழுதோ எங்கும் எப்பொழுதும் மகிழ்ச்சி அளிப்பது.
விடியோ றெக்கோடர் கொண்டது.
நாஷனல் QC குழுவின் பரிசு பெற்றது.
அமெரிக்காவில் அதிக விற்பனையாவது.

விலை ரூ. 1786/-
கட்டுத் தவணைக்குமுண்டு. ஒரு வருட உத்தரவாதம் விற்பனைக்குப் பின் தொழிற் சாலையில் பயிற்சி அளிக்கப் பட்டவர்களால் விசேஷ நிபுணத்துவ சேவை.

இப்பொழுது இலங்கையில் விற்பனையாகின்றது.
ஏக விநியோகஸ்தர்கள்:
ஸ்பாக்ஸ் என்ரபிறைசஸ்
11, கேப்பெட்டிபொல மாவத்த, கொழும்பு 5, தொலைபேசி 86186

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - ஜெயலலிதா
பாட்டும் பரதமும்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி
கப்பலோட்டிய
தமிழன்

## மத்தியூஸ் அடிகளாரின் 100-வது பிறந்த தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் ஸ்தாபகரில் ஒருவரான வண. பிதா மத்தியூஸ் அடிகளாரின் 100-வது பிறந்ததினம் நாளை சென். பற்றிக்ஸ் கல்லூரியில் கொண்டாடப்படவுள்ளது.

அன்றைறதினம் காலை. சென். பற்றிக்ஸ் கல்லூரி தேவாலயத்தில் திருப்பலிப் பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

ராஜா (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — ஜெயலலிதா,
சௌகார்ஜானகி நடித்த
ஒளிவிளக்கு
ஈஸ்மன் கலர் புதிய பிரதி

REGAL (Jaffna)
2nd CROWDED WEEK
Daily 6-30, 7-30 & 9-30 p.m. only
PERCY'S PROGRESS
(Color) (Adults Only)
வயது வந்தவர்களுக்கு மட்டும்

ராணி (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
டொன் பொஸ்கோ காஞ்சனா
செல்வசேகரன் ஜவாகர்
இன்னும் பலர் திறம்பட நடித்த
எங்களில் ஒருவன்

3-வது வெற்றி வாரம்!
தினசரி 4 காட்சிகள்
சாந்தி (யாழ்நகர்)
இராஜேந்திர குமார் — ஹேமமாலினி — பானுரேகா
"கோரா அவுர் காலா" ஹிந்தி கலர்
யாழ்நகரில் இப்படம் இதுவே கடைசித்தடவை

தினசரி 4 காட்சிகள்
பல்லாயிரம் யாழ் ரஸிகர்களின் வேண்டுகோளுக்கிணங்கத் திரையிடப் படுகின்றது.
மனோகரா (யாழ்நகர்)
ஸ்ரீகாந்த் - பிரமிளா
லக்ஷ்மி (பசு) நடித்த
கோமாதா என் குலமாதா
(புதிய பிரதி - ஈஸ்மன்கலர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி: 3-30, 6-30 & 9-45
சனி, ஞாயிறு: 10-30, 3-30
6-30 & 9-45
எம். ஜி. ஆர்.—சாவித்திரி
வேட்டைக்காரன் (புதிய பிரதி)

லிடோ (யாழ்.நகர்)
போன்: 7693 தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—சரோஜாதேவி
என் தம்பி

கடைசி சில தினங்கள்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 2-30, 6-15, 9-30.
THE TOWERING INFERNO
த டவரிங் இன்பேர்னோ

150வது தினம்!
வின்சர் (யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

## இன்றைய பலன்

வைகாசிமாதம் 12-ம் திகதி

சனிக்கிழமை

(26-5-1979)

**மேஷம்:** எண்ணத்தின் தாக்குதல்கள் நெஞ்சத்தைப் புண்ணாக்கும். அற்ப விடயத்திற்கும் கூட பொல்லாங்கு கேட்க நேரிடும். தனிவழியில் நாட்டம் செலுத்துவீர்கள், சிறிவரும் கோபத்தை அடக்கவும்.

**இடபம்:** தேனை இனித்தது இன்று வேம்பாகக் கசக்கும். மனதில் போராட்டம் தோன்றும். அதிக சிந்தனைக்கு இடமளியாது அமைதியுடன் இருக்கவும்.

**மிதுனம்:** மேடைப் பேச்சாளரும் நடிகர்களும் இன்று பெரும் புகழ் அடைவார்கள். பொருள் வரவிற்கும் இடமுண்டு. இல்லத்தில் திருப்திகரமான நிலை தென்படும்.

**கடகம்:** குடும்பத்தில் சுகக்குறைவுகள் தென்படலாம். அதிக அலைச்சலின் மூலம் கவலைகள் உருவாகும். உணர்ச்சி வசப்படாதிருக்கவும்.

**சிங்கம்:** அன்னையின் அன்பு தாராளமாகக் கிடைக்கும். செய்காரியங்களில் தனிப் புகழ் பரவும். முயற்சியால் முன்னேற்றமடைய இடமுண்டு.

**கன்னி:** பிள்ளைப்பாசம் உள்ளத்தில் தலைதூக்கும். சமயோசித நடவடிக்கையின் மூலம் எதையும் வெற்றி காண்பீர்கள். குடும்பத்திலும் பிணைப்புகள் இறுகும்.

**துலாம்:** மற்றவர்களின் பொறுமைகள் உங்களை வாட்டும். உதவிக்குப் போய் உபத்திரவத்தைத் தேடிக் கொள்வீர்கள். அமைதியாய் இருத்தல் நன்று.

**விருச்சிகம்:** வெற்றி உங்களருகில் விரைந்து வரும். எதிரிகள் ஆதரவுதர முன்வருவார்கள். களஞ்திரவழியாலும் நன்மை சேரும். காதலர்களுக்கு இனிப்பான தினம்.

**தனுசு:** நம்பிக்கைமோசடி நடக்கும். வியாபாரத் துறையில் நஷ்டம் ஏற்படலாம். சிலருக்கு வாதரோகம் தென்படக் கூடும். உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும்.

**மகரம்:** இதயப்படுதாவில் இன்பத்தின் துள்ளல். பிதாவழி ஆதரவம் உண்டு. பொதுப் பணிகளில் நாட்டம் பிறக்கும். தெய்வ நம்பிக்கை மேலிடும்.

**கும்பம்:** மனதிலே புதிய எண்ணங்கள் தோன்றும். பொது மக்களின் தொடர்பு பெருகும். தொழில்துறையில் முன்னேற்றமுண்டு.

**மீனம்:** இலட்சியப் பாதையை நோக்கி வீறுநடை போடுவீர்கள். புத்திரர்களின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும். பொருள் வரவிற்கும் இன்று இடமுண்டு.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

Rio (Jaffna)
Phone: 7607
Daily 10-30, 4-45, 7-00 & 9-30 p.m.
Jim Brown in
SLAUGHTERS BIG RIP OFF
(Adults only)

## பின்னுறுதிக்கட்டளை அறிவித்தல்

மாவட்ட நீதிமன்றம்
சாவகச்சேரி

மட்டுவில் தெற்கு சாவகச்சேரி காலஞ்சென்ற திசைவீரசிங்கம் தில்லைநாதன் என்பவரின் மரணசாதனமில்லா சொத்தினதும் பொருட்களினதும் விடயத்தில்

மரணமெய்தியவர் திசைவீரசிங்கம் தில்லைநாதன் கைம்பெண் ஞானதிரவியம் தில்லைநாதன் நுணுவில் மேற்கு சாவகச்சேரி.

மனுதாரர்.

இல. 190/T

எதிர்

(1) தில்லைநாதன் விஜயேந்திரநாதன் (பராயமடையாதவர் தனது வழக்குப் பாதுகாவலன்)

(2) திசைவீரசிங்கம் ஏகாம்பரநாதன் மூலமாக. இருவரும் நுணுவில் மேற்கு சாவகச்சேரி

எதிர்மனுதார்.

மேற்படி வழக்கு மேற்குறிப்பிட்ட இறந்தவரின் மரணச் சொத்து நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரும் 1979ம் ஆண்டு ஆனிமாதம் 13ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அப் பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுவதாக்கப்படலாகாதுஎன்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1979ம் ஆண்டு வைகாசி மாதம் 22ம் திகதி நீதிமன்றக்கட்டளைப்படி

ஒப்பம்:
வி. சிவசுப்பிரமணியம்
பதிவாளர்

தயாரித்தவர்
க. கந்தசாமி
மனுதாரின் சட்டத்தரணி

0947

## 55 லட்சம்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

49,200 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. பஸ் நிலையத்திற்கு சமீபத்தில் நவீன வசதிகளைக் கொண்ட மலகூடம் அமைக்கவும், ஜி. பொன்னம்பலம் வீதியில் 3 கடைகள் நிறுவவும், 115,948 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மணிக்கூட்டு கோபுரத்தை இறக்கி, மேல்கோபுரத்தை திருத்தம்செய்வதற்கு டெண்டர் கோர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு 5,00,000 ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுளளது.

76ம் ஆண்டு 11,755,908 ரூபாவாக இருந்த சபையின் வருமானம் 79ம் ஆண்டு 17,447,888 ரூபாவாக அதிகரித்துள்ளதாகவும் திரு. சிவஞானம் தெரிவித்தார்.

திரு. சிவஞானம், கடும் சுகவீனமுற்று சத்திர சிகிச்சைக்குள்ளாகி, பூரண ஓய்வு எடுக்குமாறு டாக்டர்கள் ஆலோசனை கூறியபோதும், நகர அபிவிருத்திக்கும் மக்கள் முன்னேற்றத்திற்கும், இடைவிடாது உழைத்து, மக்கள் மனதில் நீங்காத நிரந்தர இடத்தை பெற்றுக்கொண்டார் என்றால் அது மிகையாகாது.

## கௌரவம்

(புலோலி)

வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலில் மூன்று லட்சம் ரூபா செலவில் செய்து முடிக்கப்பட்ட புதிய சித்திரத்தேரை அமைத்த பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஸ்தபதி கார்த்திகேசு சண்முகத்திற்கு சித்திரத்தேர் வெள்ளோட்டத் தினத்தன்று பருத்தித்துறை நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் பொன்னாடை போர்த்தி "சிற்பகலாமாமானு" எனும் பட்டமளித்து கௌரவித்தார்.

## கேள்விப் பத்திர அறிவித்தல்

பளைப்பகுதி நிறைவேற்றுப் பொறியியலாளர் அவர்களால் கீழ்வரும் வேலைகளுக்காகக் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. இதற்குரிய கேள்விப்பத்திரங்கள் 29-05-79-ம் திகதியிலிருந்து 31-05-79-ம் திகதி பிற்பகல் 3-00 மணிவரை பளையிலுள்ள நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்

இவ்வேலைக்கு பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களும், கிராம அபிவிருத்திச் சங்கங்களும், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களும் விண்ணப்பிக்கலாம். வேலை விபரங்கள் பின்வருமாறு:

கீழ்வரும் ரோட்டுகளுக்கு 2", 3/4" கற்கள் ஏற்றிக் கொண்டுவந்து கிப்கட்டிக் கொடுத்தல்.

1. சாவகச்சேரி-மீசாலை-டச்ரோட் 2ம், 3-ம், 4-ம் கட்டைகள்.

2. வறணி-இயற்றலை (ஒட்டுக்குளி ரோட்) 1-ம் கட்டை.

3. கொடிகாமம் கந்தசாமி கோவில் ரோட்

4. எழுதுமட்டுவாள் வடக்கு 1-ம், 2-ம், 4-ம், 3-ம கட்டைகள்.

5. மிருசுவில் அரசாங்க பாடசாலைரோட் 1-ம் கட்டை.

இவ்விடயங்கள் சம்பந்தமாக மேலும் விபரங்கள் தேவைப்படின் பளைப் பகுதி நிறைவேற்றுப் பொறியியலாளருடன் தொடர்புகொள்ளவும்.

சி. கணேசரத்தினம்
பிரதான பொறியியலாளர்
(பெருந்தெருக்கள்)
2565 யாழ்ப்பாணம்.

## கத்திக்குத்து இருவர் படுகாயம்

(மாவிட்டபுரம்)

படம் பார்த்துவிட்டு வீடு திரும்பியவர்களுக்கு, இடைவழியில் கத்திக்குத்து விழுந்ததாம்! படுகாயமடைந்த அவர்கள் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மயிலிட்டியைச் சேர்ந்த அழகராசா. எஸ். கென்னடி சிங ஆகியோரே கத்திக்குத்துக் இலக்கானவர்கள்.

வலைக்களவு ஒன்று தொடர்பாக தகவல் கொடுத்ததன் எதிரொலியாக நடைபெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவம் குறித்து காங்கேசன்துறை பொலிசார் விசாரணைசெய்து வருகின்றனர். சந்தேசநபர்கள் தலைமறைவாகியுள்ளனர்.

## கிளைக்குழுத் தேர்தல்கள்

(புலோலி)

பருத்தித்துறை, புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுத் தேர்தல்கள் அடுத்தமாதம் 16-ம் திகதி நடைபெறுமென்று இரு சங்கங்களின் செயலாளர்களும் அறிவித்துள்ளனர்.

இத்தேர்தல்களுக்கான நியமனப்பத்திரங்கள் யாழ் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட உதவித்தேர்தல் உத்தியோகத்தர்களினால் அடுத்த மாதம் 2-ம் திகதி ஏற்றுக் கொள்ளப்படுமெனவும், இதற்கான விண்ணப்பப்படிவங்களை சகல கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## கடற்கரையில் ஆணின் சடலம்

(யாழ்ப்பாணம்)

கீரிமலைக் கடற்கரையில், இனந்தெரியாத ஒரு ஆணின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. 45 வயதுடையவராக இருக்கலாம் என்று மதிப்பிடப்படுகிறது.

# குழந்தையைக் குளத்தில் மூழ்கடித்துக் கொலை செய்த தந்தைக்குத் தூக்குத் தண்டனை

## மனைவி கொலை முயற்சிக்கு 12 வருடக் கடுழியம்

(யாழ்ப்பாணம்)

5 வயது மகனை குளத்திற்குள் தள்ளி நீரில் மூழ்கடித்து கொலைசெய்த தந்தைக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. அதே குளத்தில் 8 மாதக் கர்ப்பிணியான அவரது மனைவியைத் தள்ளிக்கொலை செய்யமுயற்சித்த குற்றச்சாட்டிற்கு அவருக்கு 12 வருட கடுழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜமீல் முன்னிலையில் மூன்று தினங்களாக விசாரணை செய்யப்பட்டு நேற்றுதிர்ப்பு வழங்கப்பட்டது. தீர்ப்பையறிவதற்குகோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானோர் காணப்பட்டனர்.

மகனைக்கொலைசெய்த குற்றச்சாட்டில் எதிரி குற்றவாளி என்றும் மனைவியைக் கொலை செய்ய முயற்சித்த குற்றச்சாட்டிலும் எதிரி குற்றவாளியென்றும் ஜூரி சபையினர் தனிமையில் சுமார் 1 மணி நேரம் மந்திராலோசனைசெய்த பின் தீர்ப்பளித்தனர்

சட்டத்தின்படி கொலைக் குற்றத்திற்கு தூக்குத் தண்டனையே விதிக்கப்படும் எனத் தெரிவித்த நீதிபதி எதிரியிடம் 'ஏதாவது கூற விரும்புகிறீரா? என்று கேட்டார்.

இக்குற்றங்களைத் தான் செய்யவில்லை என்று எதிரி மறுத்தார்.

இதைத்தொடர்ந்து நீதிபதி கொலைமுயற்சிக் குற்றத்திற்கு 12 வருட கடுழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

இதன்பின் மகனைக்கொலை செய்த குற்றத்திற்கு எதிரிக்கு மரணதண்டனை விதித்து "இங்கிருந்து கண்டி போகாம்பரைச் சிறைச்சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு ஜனாதிபதி நிர்ணயிக்கும் தேதியில் நான்கு சுவர்களுக்கு மத்தியில் உயிர் உடலைவிட்டுப் பிரியும் வரை தூக்கிலிடப்படுவீர் உமது ஆத்மா சாந்தியடைவதாக எனறு தீர்ப்பில் தெரிவித்தார்.

[வழக்கு விசாரணை விபரம் 5-ம் பக்கம் பார்க்க] [க-இ]

---

கூட்டணி

## யாழ். எம். எம். சி. க்கள் இன்று கூடுகிறார்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் வெற்றி பெற்ற யாழ் மாநகரசபை அங்கத்தவர்களுக்கான விசேட கூட்டமொன்று இன்று மாலை தமிழர் விடுதலைக் கூட்டணிப் பணியகத்தில், யாழ். மாநகர முதல்வர் திரு. இ. விசுவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் உரையாற்றுவார்.

இம்மாதம் 31ம் திகதி கொழும்பு மன்றக் கல்லூரியில் ஜனாதிபதியினால் கூட்டப்படும் மாநகர, நகரசபை உறுப்பினர்களின் மாநாட்டில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பது குறித்தும் திரு. அமிர்தலிங்கம் இக்கூட்டத்தில் விளக்குவார். [கெ-இ]

---

## அமைச்சர் ஹேரத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள். நெல் சந்தைப்படுத்தும் திணைக்கள உத்தியோகத்தர்கள், உதவி உணவு கட்டுப்பாட்டதிகாரிகள், கூட்டுறவு உதவி ஆணையாளர்கள், இலாகா உத்தியோகத்தர்கள். விற்பனை இலாகா கடற்றொழில் இலாகா உத்தியோகத்தர்கள், ஜவுளி உற்பத்திச் சபை பிரதிநிதிகள் கொண்ட மாநாட்டில், அமைச்சர் கலந்துகொள்வார்.

### இரண்டாம் நாள் நிகழ்ச்சி

அமைச்சர் 2ம் தேதி காலை 8-30 மணிக்கு காங்கேசன் துறையிலுள்ள உணவுக்களஞ்சியங்களைப் பார்வையிட்டபின் அங்கு புதிதாக அமைக்கப்பட்ட களஞ்சியத்தைத் திறந்துவைப்பார்.

10-45 மணிக்கு அமைச்சர் கிரிமலைக் கேணிக்கும், தோலை கட்டி தோட்டத்திற்கும் செல்வார்.

பிற்பகல் 3 மணிக்கு பண்டத்தரிப்பு, சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும், அவற்றின் நெசவாலைகளையும் பார்வையிடுவார்.

### மூன்றும் நாள் நிகழ்ச்சி

3ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு மண்டைதீவு உபவானொலி நிலையத்தைப் பார்வையிட்டபின் நயினாதிவுக்கு விஜயம் செய்வார். பிற்பகல் 2-30 மணிக்கு காரைநகர் சீநோர் திட்டத்திற்கு விஜயம் செய்வார்.

பிற்பகல் 4-30 மணிக்கு யாழ். அரசாங்க செயலக மண்டபத்தில் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்களின் மாநாட்டில் கலந்துகொள்வார். 4ம் தேதி காலை கொழும்பு திரும்புவார். [ச]

---

## இராமகிருஷ்ண ஜெயந்தி இன்று

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ இராமகிருஷ்ண ஜெயந்தி விழா இன்று மாலை சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் திரு. ஆ. தட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் ஸ்ரீமத் சுவாமி சமகிரானந்தஜிமகராஜ் சொற்பொழிவாற்றுவார்.

ஸ்ரீ இராமகிருஷ்ணஜெயந்தி விழாவை முன்னிட்டு நடாத்திய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சுவாமிஜி பரிசில் வழங்குவார். [கொ-இ]

---

## காணி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் கச்சேரி யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

---

# தமிழ் இனத்தின் துரதிர்ஷ்டம்

## யோகேஸ்வரன் எம். பி. அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

"பேராசிரியர் செல்வநாயகத்தின் மறைவு தமிழினத்திற்குமட்டும் ஏற்பட்ட இழப்பல்ல, கற்றறிந்தோர் அனைவரதும் தீப ஒளியாகத் திகழ்ந்த; அவரது அழிவுச் சுடரின் அணைவு அனைத்துலக அறிஞர் குலத்திற்கும் ஏற்பட்டுள்ள பேரிழப்பாகும்."

இவ்வாறு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புவியியற்றுறைப் பேராசிரியரும், தமிழறிஞரும், நுய்வாளருமான சோமசுந்தரம் செல்வநாயகத்தின் மறைவையொட்டி யாழ் எம் பீ திரு வெ யோகேஸ்வரன் விடுத்த அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார் அவர் தமதுசெய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

தமிழின்மீது கொண்ட பற்றுதலால் தமிழில் ஆய்வு நடாத்தி தமிழர்களின் நிலப் பயன்பாடுபற்றி அறிய வேண்டிய அவசியத்தை உணர்ந்து ஆக்கபூர்வமான ஆய்வில் ஈடுபட்டிருந்தவேளை காலன் அவரைக் கவர்ந்தது தமிழ் இனத்தின் துரதிஷ்டமாகும். குடும்பத்தலைவனை இழந்த திருமதி செல்வநாயகத்திற்கும் தந்தையையிழந்த பிள்ளைகளுக்கும், தமது ஆசானை இழந்து தவிக்கும் தமிழ் மாணவ சமுதாயத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன். அவரின் ஆத்ம சாந்திக்க இறைவனைப் பிரார்த்திப்போமாக.

யாழ் பல்கலைக்கழக புவியியல் மன்றம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை பேராசிரியரும், புவியியல் மன்ற பெருந்தலைவருமான சோ செல்வநாயகம் எம்மைவிட்டு பிரிந்தமை எம்மை மீளாத் துயரில் ஆழ்த்துகின்றது

நெஞ்சுரமும்" துணிவும், துடிப்பும் மிக்க இளைய பரம்பரையினரின் ஆற்றலை சீரான செயல் முறைக்கு நெறிப்படுத்தி புதியதொரு சமுதாயத்தினை உருவாக்க எம்மை வழி நடத்திச் செல்வார் என்று கனவுகண்டோம். எமது கல்விப் பசியைப் போக்குவார் என ஆசைகளை வளர்த்தோம் ஆனால் அவைகளை எல்லாம் நிராசைகளாக்கிவிட்டு எமது புவியியல் தலைவர் சென்றுவிட்டார். [கா-இ]

---

## பேராசிரியர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எமது பிரதேச வளங்கள் பற்றி ஆராய்ந்து உழைப்பதற்கு அவரைப் போலொரு வருமில்லை.

இறைவன் தனது படைப்புக்களுடன் ஏன் இவ்வாறு விளையாடுகின்றாரோ தெரியவில்லை விதி விதி என்று சமாதானம் கூறலாம். ஆனால் அவரை இப்படிப் பலி எடுப்பதைநாம் எப்படி விளக்கம் கூறினாலும் அவரது ஆருயிர் மனைவியோ அன்புப்பிள்ளைகளோ ஏற்க மாட்டார்கள்.

அவரது மறைவினால் ஓர் அரிய நண்பனை, உடன்பிறந்தவன் போலஉதவும் தோழனை இழந்து தவிக்கின்றேன். [கா-இ]

---

சென்னை, மே. 25

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ஜவுளி ஆலை ஊழியர்கள் காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

அதிக சம்பளம் கோரியே இவர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர். 12 தொழிற்சங்கங்களைச் சேர்ந்த ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் நாளாந்தம் 2 கோடி ரூபா நஷ்டம் ஏற்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

---

## வருந்துகிறோம்

உடுவிலில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குள்ளான இராஜரத்தினம் இராஜேஸ்வரன் யாழ். ஆஸ்பத்திரியில் ஆபத்தைக் கடந்து சிகிச்சை பெற்றுவருகிறார். நேற்றைய 'ஈழநாடு' இதழில் இச் சம்பவத்தின் போது அவர் பலியானதாக வெளிவந்த தவறுனசெய்திகுறித்து வருந்துகிறோம். (ஆ-ர்)

---

யாழ். மாவட்டத்தில்

# சகல கிராமமன்றங்களிலும்

## ஐக்கியதேசியகட்சி போட்டியிடும்

### அமைப்பு செயலாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் உருவாக்கப்படும் சகல கிராம மன்றங்களிலும், ஐக்கிய தேசிய கட்சி போட்டியிடும் என்று ஐக்கிய தேசியகட்சி யாழ். மாவட்ட அமைப்பு செயலாளர் திரு. ரி. பரமானந்தராசா நேற்று தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் எங்கள் கட்சி ஒருமாத காலத்திற்குள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் யாழ்ப்பாணத்தில் சுமார் 5000 வாக்குகளை பெற்றது கட்சி வளர்ந்துள்ளதை எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது என திரு. பரமானந்தராசா கூறினார்.

திரு. பரமானந்தராசா மேலும் கூறியதாவது: 'அந்த ஒருமாத காலத்தில் 15 நாட்களே நாம் தேர்தல் பிரசாரத்தில், பலத்த கஷ்டங்கள் மத்தியில் ஈடுபட்டோம். பொலிஸ் அதிபர் கூட்டிய மாநாட்டில் சுவரொட்டிகளையும், கொடிகளையும் அகற்ற நான் ஒரு வாரகால அவகாசம் கேட்டேன். ஆனால் கூட்டணியினர் அதற்கு மறுத்து 24 மணிநேரத்தில் அகற்றப்பட வேண்டுமென்றனர். இந்த நிலையில் நாம் பிரசாரங்களை மேற்கொள்ள முடியாமல் போய்விட்டது

6 மாதத்திற்கு அல்லது ஒரு வருடத்திற்கு முன் நாம் யாழ்ப்பாண மாவட்டத்தில் கட்சி அமைப்பு வேலைகளை ஆரம்பித்திருந்தால், நிச்சயம் யாழ்ப்பாணத்தில் இருபதினாயிரம் வாக்குகளை பெற்றிருப்போம். சாவகச்சேரியில் ஆட்சியையும் கைப்பற்றியிருப்போம்

சிமெந்து தொழிற்சாலையில் தமிழ் இளைஞர்கள் வேலை பெற்றுள்ளதை கூட்டணியினர் ஆட்சேபித்துள்ளனர் இந்த இளைஞர்கள் எல்லாரும் தமிழ்பேசும் இளைஞர்கள் தான் இவர்கள் வேறு மாவட்டங்களை சேர்ந்தவர்களல்ல, எல்லாரும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். கூட்டணியினர் இதனை எதிர்ப்பது கவலைக்குரியது. தமிழ் இளைஞர்களுக்கு கிடைக்கும் வேலைவாய்ப்புகளுக்கு குறுக்கே நிற்பது முறையல்ல. இனி மேலாவது தமிழ் மக்களுக்கு கிடைக்கும் நன்மைகளுக்கு முட்டுக்கட்டை போடவேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

யாழ். மாநகரசபை, சாவகச்சேரி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரசபைத் தேர்தல்களில் ஐக்கிய தேசிய கட்சி அபேட்சகர்களுக்கும் வாக்களித்தவர்களுக்கும், ஆதரவளித்தவர்களுக்கும், தேர்தல் பிரசாரத்தில் பங்கெடுத்தவர்களுக்கும் ஐ தே க சார்பில் நன்றி தெரிவிப்பதாகவும். திரு பரமானந்தராசா கூறினார்.

---

## யாழ். பல்கலைக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்று காலை அவரது இல்லத்தில் இருந்து யாழ். பல்கலைக் கழகத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு காலை 8 மணிமுதல் 9 மணிவரை அங்குள்ள மண்டபத்தில் வைக்கப்படும்.

பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் பேராசிரியர்கள் ஆகியோரின் அஞ்சலியை அடுத்து அன்னாரின் பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டுதகனம் செய்யப்படும். [கொ-இ]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு மே மாதம் 26-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB/8945/78 The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu! halnei 889.